DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, THENI.

**O.S. No.190/2024**

Deposition of Witness : P.W. 2

| | |
|---|---|
| Name - **திரு.பாலமுருகன்** | Father's Name - **திரு.** |
| Village - | Taluk- |
| Caste - | Calling - |
| Religion - | Age- |

Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of the day of 21.08.2025.

(சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார் )

**முதல் விசாரணை** –

1. நான் ஸ்ரீரங்கபுரத்தில் குடியிருந்து வருகிறேன். தேனியில் துணிக்கடை வைத்திருக்கிறேன். எனக்கு வாதி லட்சுமி அம்மாளை தெரியும் அவர் எனது சித்தி. பிரதிவாதி கிருஷ்ணவேணி வாதி வீட்டுக்கு வந்து செல்லும் வகையில் எனக்கு அவர் பழக்கம். எனது சித்தி உள்ளூரில் வட்டி தொழில் செய்து வருகிறார் அது அல்லாமல் விவசாயமும் செய்கிறார்.

2. கடந்த 10.09.2022-ம் தேதியன்று பிரதிவாதி கிருஷ்ணவேணி எனது சித்தி லட்சுமி அம்மாளிடம் ரூ.10 லட்சத்தை காலை 11.00 மணியளவில் லட்சுமி அம்மாள் வீட்டில் வைத்து மருத்துவ செலவு மற்றும் கடன் தேவை என சொல்லி பணம் வாங்கினார். எனது வீடு பக்கத்து வீடு என்பதால் பணம் கொடுக்கும்போது வருமாறு எனது சித்தி லட்சுமி அம்மாள் அழைத்ததன் பேரில் நான் அவரது வீட்டுக்கு சென்று இருந்தேன். அப்போது கிருஷ்ணவேணியுடன் அவரது மகன் மற்றும் மற்றொருவர் உடன் வந்திருந்தார்கள்.

3. நான் பணம் கொடுக்கும்போது நானும் எங்கள் ஊரைச் சேர்ந்த கிருஷ்ணன் என்பவரும் மணிவண்ணன் ஆகியோர் அங்கு இருந்தோம்.

பணம் கொடுத்து விட்டு மாத, மாதம் அதற்கு வட்டி தருவதாக பிரதிவாதி கிருஷ்ணவேணி சொன்னார். பிரதிவாதி கிருஷ்ணவேணி தனது கணவர் ராணுவத்தில் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர் என்றும், அவர் காவல்துறையில் பணிபுரிந்து வருவதாகவும் எனவே மாத, மாதம் பணம் முறையாக செலுத்தி விடுவோம் என சொன்னதன் பேரில் கடன் கொடுக்கப்பட்டது.

4. கடன் கொடுக்கும்போது புரோநோட் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பிரதிவாதி சக்திவேல் என்ற நபரை அழைத்து வந்திருந்தார், அவர் தான் புரோநோட்டை பூர்த்தி செய்தார். கிருஷ்ணன் மற்றும் நானும் சாட்சி கையொப்பம் செய்தோம். சக்திவேல் உடன் இருந்தார். என்னிடம் காண்பிக்க கூடிய வா.சா.ஆ.1–ல் தான் நாங்கள் சாட்சி கையொப்பம் போட்டோம் எங்கள் முன்னிலையில் பிரதிவாதி கிருஷ்ணவேணி அந்த புரோ நோட்டில் கையெழுத்திட்டார்.

**வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்பட்டது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

SWARNAM J NATARAJAN
Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2025.08.21 15:39:13 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
தேனி.